செ.வெ.எண்: 20 நாள்:07.07.2019

## கரூர் மாவட்டம்

## கரூர் மற்றும் குளித்தலையில் 13.07.2019 அன்று மக்கள் நீதி மன்றம் (LOK ADALAT) நடைபெறவுள்ளது - மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரும், கரூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி மற்றும் சார்பு நீதிபதி ஆகியோர் தகவல்

அதன் விபரம் வருமாறு:

தேசிய மற்றும் மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் உத்திரவிற்கிணங்க கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் கரூர் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் குளித்தலை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வருகிற 13.07.2019 அன்று காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை மக்கள் நீதிமன்றம் (LOK ADALAT) நடைபெறவுள்ளது.

இந்த மக்கள் நீதி மன்றங்கள் மூலம், நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள விபத்து இழப்பீடு வழக்குகள், வேலையாள் இழப்பீடு வழக்குகள், தொழிலாளர் நல வழக்குகள் கடனுறுதி சீட்டு (புரோ நோட்டு), பாகப்பிரிவினை வழக்குகள், கிரைய உடன்படிக்கையை நிறைவேற்ற (ஏற்றதை ஆற்றுக) மற்றும் உரிமையியல் வழக்குகள், திருமண வாழ்க்கை சம்பந்தப்பட்ட வழக்குகள் (விவாகரத்து தவிர), காசோலை மோசடி, குடும்ப வன்முறை சம்பந்தப்பட்ட வழக்குகள் மற்றும் சமாதானம் செய்து கொள்ளக்கூடிய குற்ற வழக்குகள், வங்கிகள் தாக்கல் செய்துள்ள கல்வி கடன், விவசாய கடன் மற்றும் இதர அனைத்து வங்கிக் கடன் வழக்குகளும் தீர்வு காணலாம்.

மேலும், நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லாத மேற்காண் பொருளில் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அன்றே தீர்வு காண நான்கு அமர்வுகள் ஏற் படுத்தப்பட்டுள்ளது. இந்த அரிய சந்தர்ப்பத்தை வழக்காடிகளும், பொதுமக்களும், வங்கி கடன் பெற்றுள்ளோர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரும் கரூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியுமான திரு M.கிருஷ்டோபர், கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளரும்/சார்பு நீதிபதியுமான திரு C.மோகன் ராம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**